தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

[இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறாவது சட்ட மன்றப் பேரவையின் ஆறாவது கூட்டத்தொடர்.]

வெள்ளிக்கிழமை, 1980 பிப்ரவரி 1

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்புகள்

பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. தென்னேட்டி விஸ்வநாதன், திரு. எம். எஸ். முனுசாமி, திரு. ஆர். வி. எம். ஜி. ராமராவ், திரு. எஸ். சிதம்பர அய்யர், திரு. எஸ். தெய்வசிகாமணி ஆகியோர் மறைவு குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் தென்னேட்டி விஸ்வநாதன், எம். எஸ். முனுசாமி ஆகியோர் 10—11—1979 ஆம் தேதியன்றும், திரு. ஆர். வி. எம். ஜி. ராமராவ் அவர்கள் 20—11—1979 ஆம் தேதியன்றும், திரு. எஸ். சிதம்பர அய்யர் அவர்கள் 28—11—1979 ஆம் தேதியன்றும், திரு. எஸ். தெய்வசிகாமணி அவர்கள் 31—12—1979 ஆம் தேதியன்றும் மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தென்னேட்டி விஸ்வநாதன் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையிலும், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு வரையிலும் விசாகப்பட்டினம் பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1937 ஆம் ஆண்டு அந்நாளைய வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலராகவும், 1946 ஆம் ஆண்டு திரு. பிரகாசம் அவர்களின் அமைச்சர் அவையில் தலைமைப் பேரவைச் செயலராகவும், 1952-53 ஆம் ஆண்டுகளில் அவர் சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவராகவும் நமது நாட்டுக்குச் சேவை செய்துள்ளார்.

திரு. எம். எஸ். முனுசாமி அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

திரு. ஆர். வி. எம். ஜி. ராமராவ் அவர்கள் 1947 ஆம் ஆண்டிலிருந்து 1949 ஆம் ஆண்டு வரை வடக்கு நில உரிமையாளர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

திரு. எஸ். சிதம்பர அய்யர் அவர்கள் 1937ஆம் ஆண்டி லிருந்து 1939ஆம் ஆண்டுவரையிலும், மற்றும் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரையிலும் விழுப்புரம் கிராமப் புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

திரு. எஸ். தெய்வசிகாமணி அவர்கள் 1952ஆம் ஆண்டி லிருந்து 1957 ஆம் ஆண்டு வரை காஞ்சிபுரம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் 2 நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

(ஆ) இரங்கல் தீர்மானம்—

பேரவை உறுப்பினர் திரு. எஸ். சுப்பையா அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி மாவட்டம், சங்கரநயினார்கோயில் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. எஸ். சுப்பையா அவர்கள் 16—1—1980 அன்று எதிர்பாராதவிதமாக விபத்தில் மறைந்த செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

''1971-76, 1977–80 ஆக இரண்டு தடவைகள் திருநெல் வேலி மாவட்டம், சங்கரநயினார்கோயில் தொகுதி யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று இப் பேரவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவரும், இனிய பண்பும், உள்ளமும், செயல் திறனும் கொண்டவருமான திரு. எஸ். சுப்பையா அவர்கள் 16—1—1980 ஆம் தேதி யன்று எதிர்பாராத விதமாக விபத்தில் மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள் கிறது. அன்னாரது மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது''.